**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 189 /2022</u>**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17– ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | தொழில் | | விவசாயம் |
| த/பெ. | : | முருகேசன் | ஊர் | | தோகூர் |
| வயது | : | 38/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**<u>17.03.2026</u>**

**<u>எதிரி வேறு ஒரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார். PT Warrant பேரில் காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தோகூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 21.11.21ம் தேதியன்று காலை 8 மணியளவில் யூசுப் பாய் டீக்கடையில் நான் டீக்குடிக்க சென்றேன். அப்போது கண்ணன் வீட்டு 2 கருப்புநிற கிடா ஆடுகள் காணாமல் போய்விட்டதாக பேசிக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். கிடா ஆடுகள் கிடைத்துவிட்டதாகவும் பேசிக்கொண்டார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

–

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>**CC. No. 189 /2022**</u>

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17– ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 1)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கண்ணன்** | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **சின்னத்தம்பி** | ஊர் | | **தோகூர்** |
| வயது | : | 29/26 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

<u>**17.03.2026**</u>

<u>**எதிரி வேறு ஒரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார். PT Warrant பேரில் காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.**</u>

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தோகூரில் வசித்து வருகிறேன். எங்கள் வீட்டில் 4–5 ஆடுகள் வளர்த்து வந்தோம். வீட்டில் பின்வாசல் திண்ணையில் எப்போதும் ஆடுகளை கட்டி வைப்போம். கடந்த 20.11.21ம் தேதியன்று இரவு 1 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தது. ஆடுகள் கத்தியது. மழையால் கத்தியது என்று விட்டுவிட்டோம். காலை 5 மணியளவில் எழுந்து பார்த்தபோது 2 கருப்புநிற கிடா ஆடுகள் காணாமல் போய் இருந்தது. என்னுடைய இரண்டு ஆடுகளின் மதிப்பு மொத்தம் 15 ஆயிரம் இருக்கும். அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதா என்று அக்கம்பக்கத்தில் தேடினோம், கிடைக்கவில்லை. காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் விசாரித்துவிட்டு மறுநாள் ஆடுகிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். மண்டையூர் போலிஸ்ஸ்டேசன் சென்று எனது ஆடுகள்தான் என்று உறுதிசெய்தேன். எனது ஆடுகளை வாங்கி கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள ஆடுகள்தான் நான் வாங்கி சென்ற ஆடுகள். **(CP No. 202/21ல் ஒப்படைக்கப்பட்ட (ஆடுகளின்) புகைப்படம் அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

_

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.